தேதி:-22-06-2022 அசல்வழக்கு எண்.221/2017 பி.சா.1 (மகாராஜன்)

குறுக்குவிசாரணை

எனக்கு வங்கியால் கொடுக்கப்பட்ட பி.சா.ஆ.1 பவர் பத்திரம் என்பது தாவா வழக்கிற்காகவோ, தாவா பிரச்சனைக்காகவோ கொடுக்கப்பட்ட பவர் அல்ல பொதுவாக கொடுக்கப்பட்ட பொதுஅதிகாரம் என்றால் வங்கி சார்பாக வழக்குகளை நடத்துவதற்காக பொதுவாக கொடுக்கப்பட்ட பொதுஅதிகாரம் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 பொதுஅதிகாரப்பத்திரத்தை அங்கீகாரம் செய்ய நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அங்கீகாரம் பெறவில்லை என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. பி.சா.ஆ.2 ஆவணத்தை நான் படித்துப் பார்த்துள்ளேன். அதிலுள்ள சரத்துக்கள் எனக்குத் தெரியும். inventory fund facility account என்பது புதுவாகனங்கள் வாங்குவதற்கு தான் போடப்பட்டது என்றும், அது Slow moving vehicles க்காக போடப்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கொடுக்கப்பட்ட பி.சா.ஆ.1 ஆன பொதுஅதிகார பத்திரம் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்படவில்லை என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணமானது எனக்கும், வாதிக்கும் இடையே ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஒப்பந்தப்படி வாதிக்கு இருசக்கரவாகனங்கள் சப்ளை செய்யப்பட்டு அந்த invoice ஐ வங்கிக்கு அனுப்பி வாதி கேட்டுக் கொண்டால் தான் 1, 2 பிரதிவாதிகளுக்கு 3ம் பிரதிவாதி பணத்தை கொடுக்க முடியும் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.சாஆ.4 ஆவணத்தில் 28.10.2011ம் தேதியிட்ட வாதி 3ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட கடிதத்தில் இருசக்கரவாகனங்கள் வாதிக்கு அனுப்பப்பட்ட பிறகு வாதி கேட்டுக் கொண்டால் தான் 1,2 பிரதிவாதிகளுக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள் என்றால் சரிதான். எனக்கும், 1,2 பிரதிவாதிகள் மற்றும் வாதிக்கும் இடையே நடைபெற்ற பணபரிவர்த்தனையானது மின்னஞ்சல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் access ல்

நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. ஒருசில சமயங்களில் physical ஆகவும் நடைபெறும். வாதிகள் பணத்தை withdraw செய்ய முடியாது என்று சொன்னால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் பணத்தை 3ம் பிரதிவாதியிடம் இருந்து விடுவிக்க மின்தொடர்பு மூலமும், தொலைபேசி மூலமும் 3ம் பிரதிவாதியை அணுகலாம் என்று சொன்னால் சரியல்ல. மின்தொடர்பு மூலம் மட்டும் தான் அணுக முடியும். வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே email மூலமாகத் தான் தொடர்பு கொள்ள முடியும் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் email ஆனது 1, 2 பிரதிவாதிகளுக்கும், 3ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டது ஆகும். 18.09.2014 என்று அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் **வா.சா.ஆ.11** ஆகும். வா.சா.ஆ.11 ஆவணத்தில் இருசக்கரவாகனம் வாங்குவதற்கு முன்பாகவே 1, 2 பிரதிவாதிகளுக்கு தொகை விடுவிக்கப்பட்டது என வா.சா.ஆ.11ல் கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 12.03.2014, 03.09.2014, 22.09.2014 ஆகிய தேதிகளில் 1, 2 பிரதிவாதிகளால் இருசக்கரவாகனங்கள் வாதிக்கு அனுப்பப்படுவதற்கு முன்பே 3ம் பிரதிவாதியால் 1, 2 பிரதிவாதிகளுக்கு வங்கியில் இருந்து பணம் விடுவிக்கப்பட்டது சம்பந்தமாக வாதியால் மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டுள்ளது என்றால் எங்களுக்கும், அனுப்பப்பட்டுள்ளது. 1, 2 பிரதிவாதிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் குறித்த ஆவணம் **வா.சா.ஆ.12**. என்னிடம் காண்பிக்கப்படுவது வாதியால் inventory fund facility account ஐ நிறுத்தி வைக்கச் சொல்லி கொடுக்கப்பட்ட மின்னஞ்சல் ஆகும். அது **வா.சா.ஆ.13**. இவ்வாறு dead vehicles, slow moving vehicles ஆகிவற்றிற்காக இருசக்கரவாகனங்களை அனுப்பவதற்கு முன்பே பணத்தை 3ம் பிரதிவாதி 1,2 பிரதிவாதிகளுக்கு விடுவித்ததால் வாதி தண்டவட்டி மற்றும் வாதிக்கு இழப்பும் ஏற்பட்டது என்று சொன்னால் நாங்கள் ஒப்பந்தப்படி நடந்து கொண்டோம். வாதி அனுப்பிய emailக்கு எங்களது வங்கியில் பதில் அனுப்பினோமா இல்லையா என்றால் பழைய mail ஆக

இருப்பதால் அனுப்பினோமா இல்லையா என்று சரியாக சொல்ல முடியாது. நாங்கள் ஒப்பந்தப்படி நடந்து கொண்டோம் என்பதை காண்பிப்பதற்காகவும், இருசக்கரவகாகனங்களை வாதி பபெற்ற பின்பு தான், வாதி கேட்டுக் கொண்ட பினனர் தான் 1,2 பிரதிவாதிகளுக்கு பணத்தை விடுவித்தோம் என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அந்த தேதியில் உள்ள invoice ஐ எங்களது வங்கியால் எடுக்க முடியவில்லை. வாதி சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எங்களது வங்கியில் வாதி கணக்கை முடித்துக் கொண்டதால் எங்களால் கணக்குப்பட்டியல் தாக்க்ல் செய்ய முடியாது. வாதி சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எங்களது வங்கியில் வாதி கணக்கை முடித்துக் கொண்டதால் எங்களால் கணக்குப்பட்டியல் தாக்கல் செய்ய முடியும் என்றும், தற்போது தாக்கல் செய்தால் வழக்கு எங்களுக்கு விரோதமாக இருக்கும் என்பதால் தாக்கல் செய்ய இயலாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.